Registered as a Newspaper in Ceylon * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 61
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 29 முஹறம் 12 வியாழக்கிழமை (11-4-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

# "சிறுபான்மையினர் மிக விழிப்பாக இருக்க வேண்டும்

# சமுதாயமும் கல்வியும் ஆசிரியர் பொறுப்பு"

## வரவேற்பு உபசாரத்தில் உபசபாநாயகர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

'தென்னிலங்கையில், புதிய அரசியல் சக்திகள், இயக்கங்கள்; சூழ்நிலைகள் வடிப்படியாக வெகுதீவிரமாக உருவாகி வருகின்றன. பெரும்பான்மை இனத்தவர்களுக்கிடையில் எழுகின்ற மோதல்களுக்கிடையில், சிறுபான்மை இனத்தவர்கள் சிக்கித் தவித்து சீரழிந்து சின்னாபின்னமாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும்.'

உப-சபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. எம். சிவசிதம்பரம், தமக்களிக்கப்பட்ட பாராட்டு விழாவில் மேற்கண்டவாறு கூறினார்.

அகில இலங்கைதமிழாசிரியர்சங்க வடஇலங்கை கிளையார் சார்பில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நேற்றுக்காலை உபசபாநாயகரை பாராட்டும் வைபவம் நடைபெற்றது. இவ்விழாவில் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி ஜி. பொன்னம்பலம், கோபபாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை, வடமாநில கல்வி அதிபதி திரு. எஸ். தணிகாசலம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### ஆசிரியர்கள் பொறுப்பு

திரு. ச. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உப-சபாநாயகர் திரு. எம் சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தமிழ்மக்களைக் கடுமையானகட்டம் எதிர்நோக்கியுள்ளது. தென்னிலங்கையில் ஏற்பட்ட சமுதாயப் புரட்சிக்கு தலைமை தாங்கியவர்கள் தென்னிலங்கை ஆசிரியர்களே. அதேசமயம், சிந்தித்து செயலாற்றக் கூடிய ஆசிரிய சமுதாயம் வட இலங்கையில், சமுதாய, அரசியல் துறையில் மௌனமாக இருந்

### கல்வியை காக்க வேண்டும்

யாழ்ப்பாணத்தில் கல்வி நிலைமையை எத்தனையோ கோணங்களிலிருந்து தாக்கி வருகின்றார்கள். யார் எந்தக் கோணத்திலிருந்து தாக்குதல் நடத்தினாலும் நமது குழந்தைகளின் கல்வியைப் பாதுகாப்பது ஆசிரியர்களின் கடமையாகும். இது ஆசிரியர் சமுதாயத்தின் சிறந்த பணியாகும். எல்லாருக்கும் தாய் மொழியில் கல்வி கற்க வசதியளிக்கப்பட்டுள்ளது நமது கல்வியை காப்பது ஆசிரியர்கள் பொறுப்பாகும்.

எத்தனை சிக்கல்கள், இடமாற்றங்கள் வந்தாலும் கைகொடுத்து பிள்ளைகள் கல்வியை ஆசிரியர் சமுதாயம் பாதுகாக்க வேண்டும்.

பின்தங்கிய பகுதிகளை உயர்த்த வேண்டும் என்று சிலர் விரும்புகின்றார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் உயர்ந்த தரத்தில் இருக்கின்ற பாடசாலைகளின் தரத்தைக் குறைத்து பின்தங்கிய பகு

(6ம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு தொற்றுநோய் பீடித்தது

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 38 ஊழியர்கள் கடந்த ஒரு மாதகாலத்துள் தொற்றுநோய்களுக்கு இலக்காகியுள்ளார்களாம். தொற்று நோயைத் தடுக்க இங்கு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததே இதற்குக் காரணமெனத் தெரிகின்றது.

சின்னமுத்து, பொக்கிளிப்பான், மலேரியா போன்ற தொற்றுநோயுள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்க யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் தனிப்பட்ட வார்ட்டுகள் இல்லாததே இதற்குக் காரணமாம். குறிப்பிட்ட ஒரு வார்ட்டில் மட்டுமன்றி சகல வார்ட்டுகளிலும் பரவலாக இந்த நோயாளர்கள் அனுமதிக்கப்படுவதே இதற்குக் காரணம் என இங்குள்ள ஓர் ஊழியர் தெரிவித்தார்.

இந்த நோயாளிகளைக் கவனிக்கும் வேலைகளில் ஈடுபட்ட 'அட்டன்டன்ட்' சிறு ஊழியர்கள் உட்படமொத்தம் 38 பேர் தொற்றுநோய்க்கு இலக்காகியுள்ளார்கள். இதனைப் பரவவிடாது தடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த ஊழியர்கள் கேட்டுள்ளனர். (கா, நி.)

## 'வாக்குரிமை உள்ளவர்களை இந்தியாவுக்கு அனுப்பமுடியாது'

### டொரிக் டீ சூசா கூறுகிறார்

நாவலப்பிட்டி, புதன்

"பிரச்னைகளை எழுப்பும் அரசு அல்ல. பிரச்னைகளைத் தீர்க்கும் அரசே எமக்குத் தேவை. இன்றைய அரசாங்கம் பதவிக்கு வருமுன் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது. அதனால் தான் நாங்கள் முக்கட்சியினர் சேர்ந்து மக்கள்முன் செய்துகொண்ட ஒப்பந்த கட்டத்திற்கு கண்டியில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டனர். ஆனால் ஏழு கட்சிகளின்கீழ் ஆளும் திரு. டட்லி, திரு. செல்வநாயகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை உங்கள்முன் சமர்ப்பிக்கமாட்டார்."

இவ்வாறு நாவலப்பிட்டி நகரமண்டபத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சிக் கூட்டத்தில் பேசிய டாக்டர் என். எம். பெரேரா

(6-ம் பக்கம் பார்க்க)

கீரிமலையில் சம்பவம்:

## கோஷ்டிச் சண்டையில் நால்வருக்கு படுகாயம்

### ஐந்து பேர் கைது; எண்மர் தலைமறைவு

அளவெட்டி, புதன்

கீரிமலையில் இருபெண் உட்பட 17 பேர்களுக்கிடையில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் நால்வர் பலத்த காயமடைந்தனர்.

கீரிமலையை அடுத்த இயனப்புலத்தைச் சேர்ந்த 17 பேர்களுக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் துவக்கு கத்தி மற்றும் பயங்கர ஆயுதங்களும் பாவிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இக்கலவரத்தில் பலத்த காயமடைந்தவர்களான முருகன் பெரியான், பெரியான் நடேசு, யாழ் ஆஸ்பத்திரியிலும் பெரியான் தெய்வி, பெரியான் தியாகராசா காங்கேசன்துறை ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சண்டை சம்பந்தமாக நாகன் வைரவன், இளையான் ஆண்டி காத்தான் ஆறுமுகம் இளையான் சின்னக்கண்டு நாகன் முருகன் ஆகியோரை சந்தேகத்தின்பேரில் காங்கேசன்துறைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

இதுசம்பந்தமாக காத்தான் மாணிக்கம், இளையான் நாகன், நாகி முருகன் நாகன் இளையான் முருகன் ஐயங்கன், இளையான் தர்மு, மூத்தான் தம்பிமுத்து, சரசி ஐயங்கன் ஆகியோரை காங்கேசன்துறைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

காங்கேசன்துறைப்

# நியூசிலாந்தில் பயங்கரசூறாவளி

## இருபதுபேர் மாண்டனர்;

## காற்று ஒரு பெண்ணைதூக்கி வீசியது

வெலிங்டன், ஏப். 10

நியூசிலாந்தில் இன்று காலை வீசிய பயங்கர சூறாவளியில் பலர் காயமுற்றனர். 20 பேர் மாண்டனர். பெண் ஒருவர் ஜன்னலால் வெளியே தூக்கி எறியப்பட்டார். பல கட்டடங்கள் சேதமுற்றன. சில மணிநேரம் ஒலிபரப்பு துண்டிக்கப்பட்டது.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கையை பிர

[8ம் பக்கம் பார்க்க]

பொலிஸ் குற்றத்தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு. [illegible] இதுசம்பந்தமாக புலன் விசாரணை செய்து வருகிறார்.

கடைசிச்செய்தி

### 150 பேர் மரணம்

சூறாவளி வீசியதைத் தொடர்ந்து துறைமுகத்தில் படகு ஒன்று மூழ்கியதில் சுமார் 150பேர் மரணமாகி இருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கவிலை குறைகிறது: வியட்னும் சமாதானப் பேச்சின்பயன்

## 'இரட்டை மார்க்கெட்' தீர்மானவிளக்கம்

— மன்மோகன் ஸேதி —

ஜனதிபதி ஜோன்சனின் சமாதானப் பேச்சுக்கு ஹனுய் அரசாங்கம் ஒருவித சம்மதம் தெரிவித்த செய்தி வெளியானதும், லண்டன் மார்க்கெட்டில் தங்கத்தின் விலை திடீரெனக் குறைந்தது.

புதன்கிழமையன்று தங்கத்தின் விலை அவுன்சுக்கு 37.25 டாலராக இருந்தது. வியாழனன்று 36.7 க்குக் குறைந்தது. வட வியட்னுமின் பதில் கிடைக்கு முன் தங்கத்தின் விலை 37.6 டாலராக இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அரசாங்கம் நிர்ணயித்துள்ள விலை ஒரு அவுன்ஸ் தங்கம் 35 டாலர். சென்ற மாதம் வியட்னும் யுத்தத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டு, அமெரிக்காவிலும் தீவிர எதிர்ப்பு கிளம்பியதும், டாலர் மதிப்பு குறைந்தது. தங்கத்தின் விலை 45 டாலருக்கும் கூட சில இடங்களில் உயர்ந்தது. பாரிஸ் நகரிலே அமெரிக்க டாலருக்கு மானம் இல்லாது போயிற்று ஏனெனில், வியட்னும் யுத்தத்தின் பயனுக, அமெரிக்க டாலரின் மதிப்பு மேலும் குறையுமென்பதால் தான்.

அமெரிக்க செலாவணிச் சட்டப்படி 35 டாலர் கொடுத்தால் ஒரு அவுன்ஸ் தங்கம் கொடுக்கவேண்டும். அமெரிக்க நாணயத்தின் மதிப்புக் குறைந்து, தங்கத்துக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்படவே, பலரும் தங்கத்தை வாங்க முற்பட்டனர். அமெரிக்கா இந்நிலைமையை சமாளிக்க, தன் கையிருப்புத் தங்கத்தை ஒரு பக்கம் வெளியிட்டதுடன். ஐரோப்பிய மத்திய வங்கி அதிகாரிகள் கூடி நிலைமையைப் பற்றி யோசித்து நிலைமையை சமாளிக்க புதிய ஏற்பாடு செய்தார்கள். அதாவது அமெரிக்க டாலர் மதிப்பைக் குறைப்பதில்லை என்றும் ஓர் அவுன்ஸ் தங்கம் 35 டாலராகவே இருக்குமென்றும் ஆனல் அரசாங்க சம்பந்தமான காரியங்களுக்கே தங்கத்தை விற்பதென்றும், மற்றபடி வெளிமார்க்கெட்டில் தங்கம் விலை கட்டுப்பாடில்லாமல் இருக்குமென தீர்மானிக்கப்பட்டது தங்கத்துக்கு இரு வித விலை இருக்கும் படி செய்ததன் நன்மை தீமைகள் எதுவாயினும், சர்வதேச பணமார்க்கெட்டில் ஏற்படவிருந்த பெரும் குழப்பத்தை இந்தத் தீர்மானம் தடுத்துவிட்டதென்பதில் சந்தேகமில்லை.

இரண்டு வாரங்களாக தங்கத்துக்கு ஏற்பட்ட என்றுமில்லா கிராக்கி, உண்மையான வர்த்தகவிஷயத்துக்காக அல்ல. அமெரிக்க டாலர் மதிப்பு குறையுமென்றும், அப்படிக் குறைந்தால் தங்கவிலை உயர்ந்து பெரும் லாபம் தட்டலாமென்றும் நினைத்தே, தங்கத்தை அவசர அவசரமாய் பலரும் வாங்கினர். சில நாடுகள் தங்க விலை உயர வேண்டுமென்று சுயநலத்துடன் எதிர்பார்த்தன. அவர்களுக்கெல்லாம் இத்தீர்மானம் ஓரளவு ஏமாற்ற மளித்தது. இதனுல் பிரெஞ்சு மார்க்கெட்டில் தங்க விலை அவுன்ஸுக்கு 5 டாலர் குறைந்தது. பிரிட்டிஷ் ஸ்டர்லிங்கின் மதிப்பும் சற்றே உயர்ந்தது.

அமெரிக்காவின் கடன் பொறுப்புகள் 30 பில்லியன் டாலர். அதனிடம் உள்ள கையிருப்புத் தங்கத்தின் மதிப்பு 11 1/2 பில்லியன் டாலர் தான் தங்கக்கூட்டு நாடுகளிடமுள்ள சுமார் 25 பில்லியன் டாலர், தங்கத்தை அரசாங்கம் நிர்ணயித்துள்ள 35 டாலர் விலைக்கு விற்பதாயின், தங்க விலையை அப்படியே ஸ்திரப்படுத்தியிருக்கலாம். ஆனல் இதனல் அமெரிக்க கையிருப்புத்தங்கமெல்லாம் கரைவதுடன் தங்கக்கூட்டு நாடுகளின் கையிருப்புத் தங்கமும் பாதிக்குமேல் கரைந்து செலாவணி நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

1967-ம் வருஷத்திலே அமெரிக்கா 3.7 பில்லியன் டாலர் வெளிநாடுகளுக்குச் செலுத்த நேரிட்டது. தங்கக் கூட்டுநாடுகள் இந்நிலையில் டாலர் மதிப்பைக் காக்க தங்கத்தைக் கட்டுப்பாடின்றி விற்ருல், தங்கமெல்லாம் இழந்து பாப்பராகி விடவேண்டியிருக்கும்.

உலகிலே மற்ற பொருள்களின் விலைவாசிகள் பல மடங்கு உயர்ந்தும். சென்ற 34 வருடகாலமாக தங்கத்தின் விலை மட்டும் மாருமல் இருந்துவந்துள்ளது. அமெரிக்கா தன் அதிக வர்த்தக செல்லுமதியை சமாளிக்க வருடத்தில் ஒருபில்லியன் டாலர் மதிப்புள்ள தங்கத்தை வெளியேற்றவேண்டியிருந்துவந்துள்ளது. 1937 முதல் 1948 வரை வருடத்தில் ஒருபில்லியன் டாலர் தங்கம் வீதம் அது வர்த்தக லாபம் பெற்றுவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். வெளிநாட்டு யாத்திரையைக் கட்டுப்படுத்தியும், வங்கி வட்டி விகிதத்தை உயர்த்தியும், வருமான வரியில் சதம் உயர்த்தியும் நடவடிக்கை எடுத்ததால், அமெரிக்கா தன் வர்த்தக நஷ்டத்தை ஒரு விதமாக ஈடு செய்யலாம். இந்நிலையில் டாடல் மதிப்பைக் குறைத்திருந்தால் சர்வதேச செலாவணித் திட்டமே குலைந்து போயிருக்கும்.

ஆகவே சாதாரண வர்த்தகக் காரணங்களுக்கல்லாமல், 'சூதாட்ட' நோக்கத்துடன் தங்கம் கேட்டவர்களுக்கு மறுப்பது ஒன்றுதான் தங்கக் கூட்டு நாடுகளுக்கு ஒரே நல்ல வழி இருந்தது. இதுதான் தங்கத்துக்கு இருவித விலைவுகள் ஏற்படுத்தியதன் நோக்கம். இன்றைய உலக பொருளாதார அமைப்பின்படி, சர்வதேச வர்த்தக வருமதி, செல்மதிகளை முடிவாகத்

[6-ம் பக்கம் பார்க்க]

# மருதடி விநாயகர் கோயில்

பழைய காலத்தில் தோன்றிய இவ்வாலயம் தமிழ் மன்னர் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது சிறந்துவிளங்கி பின்னர் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. கோயில் அழிக்கப்பட்ட பின்பும் ஊர்மக்கள் ஒரு மருத மரத்தின் அடியில் விநாயகரை வைத்து வணங்கி வந்தார்கள்.

பிரிட்டிஷ் ஆட்சி வந்தபோது முந்திய விநாயகர் ஆலயம் இருந்த இடத்தில் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தைக் கட்டுவதற்கு அவர்கள் அமெரிக்க மிஷனரிமாருக்கு அனுமதி கொடுத்தார்கள். ஊர்மக்களும் பிறஊரவரும் ஆர்ப்பாட்டம் செய்ததன் விளைவாக முந்திய ஆலயம் இருந்த இடத்திற்கெதிரே ஒரு விநாயகர் ஆலயம் அமைக்க இடம்அளிக்கப்பட்டது.

போத்துக்கீசர் கோயிலை உடைத்தபின்பு தாங்கள் வணங்கி வந்த மருதமரம் புதிய கோயிலின் ஆதிமூலமாக அமைந்துவிட்டபடியால் சனங்களும் இதற்கு சம்மதித்தார்கள் முந்திய ஆலயத்தின் அமைப்பிலேயே இன்றைய புதிய ஆலயம் 1820-ம் ஆண்டு கட்டி முடிக்கப்பெற்றது.

இதனுக்கு எதிரேயுள்ள இன்னொரு சமயக் கோயிலை [illegible] மான உணர்ச்சிகளை கிளப்புவதிலும் பார்க்க, விநாயகர் மேற்கு நோக்கியிருப்பதே சிறந்ததென்று சமூகத்தலைவர்கள் முடிவு செய்தனர். மருதடி விநாயகர் இன்று மேற்கேயுள்ள விசாலமான வயல் வெளிகளையும், பொருத்தமாக அங்குள்ள மயானத்தையும் நோக்கியவண்ணமிருக்கிருர்.

வருடத்தில் 16 திருவிழாக்கள் நடக்கின்றன. 16-ம் நாள் சப்பறத் திருவிழா. அடுத்த நாள் தமிழ் புதுவருடப் பிறப்பன்று தேர்த்திருவிழா. 148 வருடங்களுக்கு முன் இக்கோயில் திருத்தியமைக்கப்பட்டபோது திருவிழா செய்தவர்களின் வம்சத்தினரே இன்றும் இத்திருவிழாக்களை நடாத்திவருகிருர்கள். பழங்கால முறைகள் எதுவும் மாறவில்லை. மேளக்கச்சேரிகள் முதலிய கலைநிகழ்ச்சிகள் நடக்கும்.

16-ம் திருவிழாவன்று வழக்கமாக ஒரு கதாப்பிரசங்கம். நடைபெறும். இவ்வாண்டு அருட்கவி சி. வினசித்தம்பி அவர்கள் 'பிறகுவிற்ற விமலன்' என்ற பொருள் பற்றி பிரசங்கம் செய்வார்.

என்னவிதமான வேற்றுமைகள் இருந்தபோதிலும் திருவிழாக் காலங்களில் எல்லோரும் ஒரு மனதாக விநாயகப்பெருமானுக்கு தொண்டாற்றி வழிபடுவது ஒரு சிறந்த அம்சமாகும்.

## அறிவித்தல்

தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பையொட்டி [13-4-68] சனிக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் [14-4-68] ஞாயிற்றுக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவர மாட்டாது.

## மணிவாக்கு

தனக்குள் சாந்தியைக் கண்டவர்தான் உலகத்திலே மற்றவர்களுக்கு அமைதி ஏற்படச்செய்ய முடியும். தனிப்பட்டவர்களின் அமைதியே உலக அமைதிக்கு அடிகோலும். அது ஒன்றுதான் வழி.

— சுவாமிராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANAD: Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 89.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 29ம் திகதி [11-4-68]

## மீனவர்களுக்கு பாதுகாப்பு

நாடெங்குமுள்ள மீனவர்களுக்கென ஷேமலாப நிதித்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவும் விவசாயக் கழகங்களைப் போன்று மீனவர் கழகங்களை அமைத்து இத்திட்டத்தை அமுல் நடத்தவும் அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி மீனவர்களுக்கு மட்டுமல்ல மீனவர் நலனிலும் நாட்டின் முன்னேற்றத்திலும் அக்கறையுடையவர்களுக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

சில வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையைவிட இப்பொழுது இலங்கையில் மீன்பிடித் தொழில் ஓரளவு அபிவிருத்தியடைந்திருக்கிறது இன்னும் நவீன முறைகளைக் கடைப்பிடிப்பதுடன் மீனவர்களுக்கு உதவியும் ஊக்கமும் அளிக்கப்பட்டால் மீன்பிடித் தொழில் இங்கு பெருமளவில் விருத்தியடைவதுடன் நாட்டின் மீன் தேவை பூர்த்தியடையவும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணி சம்பாதிக்கவும் வழி பிறக்கும். இலங்கை கடலினுல் சூழப்பட்ட தீவு. இலங்கைக் கடலில் நிறைய மீன்கள் இருப்பதுடன் தரத்திலும் சிறந்த மீன்களும் இக்கடலில் கிடைப்பதாக வெளிநாட்டவர் கூறுகின்றனர். சென்ற சில வருடங்களில் நம் நாட்டு மீனவர் நவீன இயந்திரப்படகுகள் சிலவற்றையும் வேறு புதிய முறைகளையும் கைக்கொண்டு மீன்பிடித் தொழிலில் முன்னேற்றம் கண்டுள்ளனர். ஆயினும் இன்னும் பழைய முறையையே பின்பற்றும் மீனவர் பெருமளவில் உள்ளனர். அவர்களுக்குப் போதிய உதவியும் ஊக்கமும் இல்லாதது இதற்குக் காரணம். இதுதவிர மீனவர்களுக்குப் பாதுகாப்பு வசதியில்லாததும் மீன்பிடித்தொழில் இங்கு விருத்தியடைய முடியாமலிருப்பதற்கு முக்கியகாரணம் என்று சொல்லலாம். இலங்கையில்பெருமளவில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் வடபகுதியிலுள்ள மயிலிட்டியைச் சேர்ந்தவர்கள். 1964-ம் ஆண்டின் இறுதியில் வீசிய கோரப் புயலுக்கு அப்பகுதி மீனவர்கள் பலர் பலியானுர்கள். அவர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும் அரசாங்கமும் மக்களும் அனுதாபம் தெரிவித்ததுடன ஏதோ சிறிய உதவியும் அளித்தனர். ஆழ்கடலில் பல ஆபத்துக்களையும் எதிர்நோக்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதற்கு ஷேமலாப நிதித்திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுவது அவசியம். மீனவர்களுக்கு ஷேமலாபநிதித் திட்டம் கொண்டுவரப்பட்டாலும் அவர்களுக்கென 'இன்ஷூரன்ஸ்' திட்டம் ஒன்றும் கொண்டுவரப்பட்டால் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு மற்றவர்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் ஏற்படும். மீன்பிடித் தொழிலும் விரைவாக விருத்தியடையும்.

## நாட்டிலும் நகரிலும்

நம்மூரில் பலர் தமிழ் வைத்தியத்தை விரும்பாமல் ஆங்கில வைத்தியத்தை நாடுவதற்கு ஒரு முக்கிய காரணம் என்னவென்ருல் தமிழ் வைத்தியர்கள் விதிக்கும் மிகக் கடுமையான பத்தியமே.

புழப்புளிசேர்க்கப்படாது. பாவற்காய், பயிற்றங்காய், பூசினிக்காய் சாப்பிடப்படாது, பச்சைத் தண்ணீரில் குளிக்கப்படாது — இப்படி இன்னேரன்ன சட்டங்களையும் கட்டுப் பாடுகளையும் தமிழ் வைத்தியர் விதித்து விடுவார்.

ஆங்கில வைத்தியத்தில் அப்படி ஒரு விதமான கட்டுப்பாடும் கிடையாது. எதுவேண்டுமானுலும் சாப்பிடலாம், என்ன வேண்டுமானுலும் செய்யலாம்.

பொக்குளிப்பான், சின்னம்மை, பெரியம்மைபோன்ற நோய்கள்ஏற்பட்டுவிட்டால் தமிழ் வைத்தியர்கள் மச்சம் மாமிசம் ஆகாது என்று கடினமான கட்டளைகள் எல்லாம் போட்டு விடுவார்கள்.

ஆங்கில வைத்தியர் அப்படி ஒன்றும் தடை போடமாட்டார். ஏக போகமாக எதையும் சாப்பிடலாம், எதுவும் செய்யலாம் என்றுகூறுவார்.

ஃ ஃ ஃ

இன்றுள்ள நிலையில் நமது அரசாங்கத்தை ஒரு தமிழ் வைத்தியருக்கு ஒப்பிடலாம் போலத் தெரிகிறது.

பொது மக்களின் ஆரோக்கியத்தையும் தேக சுகத்தையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? ஆகையினுல் தான் அப்பேர்ப்பட்ட காருண்ய அரசாங்கம், ஒரு தாய் தன் மகனின் தேக நலனைப்பாதுகாப்பது போல, மிளகாய், அதிகமாகச்சேர்த்துக்கொள்ளப்படாது. பருப்பு, கடலை முதலியவை சாப்பிட்டால் வயிற்றில் வாய்வு உண்டாகும், என்றெல்லாம் பத்தியம்விதித்து மேற்படி பொருட்களை எமக்கு கட்டுமட்டாக வழங்கி வருகிறது.

கடலை வடையையும் சுண்டல் கடலையையும் கண்டு மாதங்கள் பல கழிந்து விட்டன. இவற்றை இனிமேல் எப்பொழுது காணப் போகிருேமோ கடவுள் ஒருவனுக்குத்தான் வெளிச்சம்.

உழுந்து வடையும்மிகவும் மெலிந்து போய் விட்டது. அதில் உழுந்தைக் காண்பதே அபூர்வம். உழுந்து மாவுடன் ஆட்டாமாவும் தாராளமாகச்சேர்ந்தவுடன் உழுந்த வடை உப்பிப் பெருகி தவலை போல வந்து விடுகிறது. இன்னும் சில கடைகளில் உழுந்து வடை பெரிதாய் தோற்ற வேண்டுமென்பதற்காக நாலைந்துகறிவேப்பிலைத் துண்டுகளை முழுசாகப் போட்டு விடுகிருர்கள்.

அரசாங்கத்தில் புத்திய விதிகளை மீறி நம்மீது பேரன்பு கொண்ட ஹோட்டல் காரர் இப்படியெல்லாம்புதுப்புது தந்திரோபாயங்களை கையாளுகின்றனர்.

அரைத்த பொரியாத்துளில் குழம்பு வைத்தால்அது தண்ணீராயிருக்கிறதே யென்று கண்டவுடன் ஒரு கொஞ்சம் கடலை மாவையும் சேர்த்து விட்டால் குழம்பு தடிப்பாய் வந்து விழுகிறது!

இப்படியெல்லாம் அரசாங்கம் ஒரு பக்கத்தாலும், ஹோட்டல் காரர் ஒரு பக்கத்தாலும் பொது மக்களின் தேகாரோக்கியத்தை பாதுகாத்துக் கொள்கிருர்கள்!

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த சமாதான வீரர் லூதர்கிங்கின் இறுதி ஊர்வலத்தில் பலநாட்டுப் பிரதிநிதிகள்

## ஜனாதிபதி ஜோசன்னுக்குப் பதிலாக உப ஜனாதிபதி ஹம்ப்ரி கலந்து கொண்டார்

வாஷிங்டன், ஏப்ரல் 10

**மறைந்த அமெரிக்க நீக்ரோத் தலைவரும் சமாதான நோபல் பரிசு பெற்றவருமான டாக்டர் மார்டின் லூதர்கிங்கின் சடலம் நேற்று அவரது பிறந்த ஊரான அட்லாண்டாவில் அடக்கம் செய்யப் பட்டது.**

டாக்டர் கிங்கின் இறுதிச் சடங்குகளில் பல நாட்டுப் பிரதிநிதிகளும் கலந்துகொண் டனர். அவரது இறுதிச் சடங்குகளும், ஊர்வலமும் டெலிவிஷன் மூலம் நாடெங்கும் காட்டப்பட்டது. ஊர்வலத்தில் 1 லட்சம் 50,000 க்குமதிகமான மக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலம் 15 தொடக்கம் 18 பேர்வரை அகலமாகவும் 8 தொடக்கம் 10 பேர்வரை ஆழமாகவும் இருந்தது. ஏழை-பணக்காரர், வெள்ளையர்-கறுப்பர் என்று வித்தியாசமெதுவுமின்றி மக்கள் காணப்பட்டனர்.

**ஜோன்ஸன் கலந்து கொள்ளவில்லை**

வியட்னும் சம்பந்தமான முக்கிய பேச்சுவார்த்தைகள் காரணமாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன், டாக்டர் கிங்கின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள முடியவில்லை. அவருக்குப் பதிலாக உபஜனாதிபதி திரு ஹியூபேட் ஹம்ப்ரி கலந்து கொண்டார் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மற்றும் அமெரிக்கப் பிரமுகர்களில் செனட்டர் ரொபேட் கென்னடி, செனட்டர் மக்கார்த்தி, முன்னாள் உபஜனாதிபதி திரு. றிச்சார்ட் நிக்ஸன், திருமதி ஜக்குலின் கென்னடி, நியூயோர்க்கவர்னர் திரு. றொக்பெல்லர் ஆகியோர் அடங்கியிருந்தனர். ஐ. நா. நிறுவனம் சார்பாக, ஐ. நா. அரசியல் விவகாரக் காரியதரிசி டாக்டர் ரால்ப்பஞ்ச் கலந்து கொண்டார்.

**கிங்கின் குரல் எதிரொலித்தது**

டாக்டர் கிங்குக்கு அட்லாண்டா தேவாலயத்தில் நடத்தப்பட்ட விசேஷ அஞ்சலி பிரார்த்தனை ஒன்றின் போது டாக்டர் கிங்கின் கம்பீரமான குரல் மண்டபமெங்கும் எதிரொலித்தது. நாட்டில் கறுப்பருக்கும் வெள்ளையருக்குமிடையே ஐக்கியம் நிலவ வேண்டுமென அறைகூவி அழைக்கும் அவரது பேச்சு, டேப் றெக்கோடர் மூலம் ஒலி பரப்பப்பட்டது. ஆசன முன்வரிசையில் திருமதி கிங், தமது பிள்ளைகளுடன் இருந்து தமது மறைந்த கணவரின் குரலை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருக்கக் காணப்பட்டார்.

நேற்று டாக்டர் கிங்குக்கு மரியாதை செலுத்துமுகமாக அமெரிக்கா முழுவதும் தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்திலும் அதன் கொடி அரைக்கம்பத்தில் பறந்தது.

## பல தலைநகர்களில் அஞ்சலி

டாக்டர் கிங்குக்கு அஞ்சலி செலுத்துமுகமாக ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவில் ஒரு நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

பெல்கிரேடிலும் பொன்னிலும் மக்கள், மறைந்த சமாதானவீரர் நினைவாக வீதிகளில் மௌனமாக ஊர்வலத்தில் சென்றனர்.

நெதர்லாண்ட்ஸில் டாக்டர் கிங்கின் பெயரை வீதியொன்றுக்குச் சூட்டுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதியோப்பிய தலைநகரான அடிஸ் அபாபாவில் டாக்டர் கிங்குக்கு விசேஷ பிரார்த்தனை சேவை ஒன்று நடத்தப்பட்டது. இச்சேவையில் எதியோப்பிய மன்னர் ஹெயிலி சலாஸியும் கலந்து கொண்டார்.

இந்தியாவில் பம்பாய், சென்னை மற்றும் முக்கிய நகரங்களில் டாக்டர் கிங்குக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

## கொலைகாரன் நாட்டை விட்டே ஓடிவிட்டான்?

இதற்கிடையில் டாக்டர் கிங்கைச் சுட்டுக் கொன்ற கொலைகாரன், அமெரிக்க நாட்டைவிட்டே தப்பி ஓடிவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மெக்ஸிக்கோவுக்கு ஓடிச் சென்றிருப்பானோ என்ற சந்தேகத்தில் அமெரிக்க பொலிசார் மெக்ஸிக்கோ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அமெரிக்க நகரங்கள் பலவும் அமைதியாக இருந்தன. நியூயோர்க், கான்ஸாஸ் நகரங்களில் மட்டும் சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதுவரை அமெரிக்க இனக்கலவரங்களில் இறந்தவர் தொகை 30 என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வாஷிங்டன் நகரில் மட்டும் கலவரங்களினால் ஏற்பட்டுள்ள நஷ்டம் 1 கோடியே 10 லட்சத்துக்கு மதிகமெனக் கணிக்கப்பட்டுள்ளது.

சிவில் உரிமை, வீட்டு வசதி மசோதாவொன்றை அமெரிக்க ஜனப்பிரதிநிதிகள்சபை அங்கீகரித்துள்ளது. இம்மசோதா சபையின் கமிட்டியினால் முன்னர் தடைப்பட்டிருந்தது.

வீட்டு வசதிகள் சம்பந்தமாக இனஒதுக்கல் கடைப்பிடிப்பதை எதிர்த்து உடனடி நடவடிக்கை எடுக்க இம்மசோதா வழி செய்கிறது.

---

**வியட்னும்**

# சமாதான பூர்வாங்க ஆலோசனைகள் நடத்துவதற்கான புதிய இடம்

## ஹனேயுடன் ஜோன்சன் மீண்டும் தொடர்பு



வாஷிங்டன், ஏப், 10

**வியட்னும் சமாதானம் சம்பந்தமான பூர்வாங்க ஆலோசனைகள் நடத்தப்படவேண்டிய இடம்பற்றிப் புதிதாகத் தாம் ஒரு செய்தியை வடவியட்னுமுக்கு அனுப்பியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் அறிவித்துள்ளார்.**

இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய இடமொன்றை ஜனாதிபதி ஜோன்சன் தமது செய்தியில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

வடவியட்னுமுடன் தூதுவர் நிலையில் பேச்சுவார்த்தைகளை நடத்த அமெரிக்கா தயாராகவுள்ளதாக அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமது கிராமப்புற புகலிடமான காம்ப் டேவிட்டிலிருந்தே ஜனாதிபதி, தாம் வடவியட்னுமுக்கு அனுப்பியுள்ள செய்திபற்றித் தகவல் வெளியிட்டார்.

காம்ப் பேட்டியில் ஜனாதிபதி ஜோன்சன், தமதுவியட்னும் ஆலோசகர்களுடன் நடாத்தியுள்ள பேச்சுவார்த்தைகளின்போதே இவ்வறிவித்தலை வெளியிட்டார். இப் பேச்சுவார்த்தைகளில், ஜோன்சனின் சுற்றுலாத் தூதுவரான திரு. அவரெல் ஹரிமனும், தென்வியட்னும் அமெரிக்க தூதுவர் திரு. பங்கரும் கலந்துகொண்டனர்.

**இணக்கம் இல்லை**

புதிய இடமொன்று பற்றியஜோன்சனின் அறிவிப்பு, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்காவும் வடவியட்னுமும் முதலில் ஆலோசனை கூறிய இடங்கள்பற்றி இருநாடுகளுக்குமிடையே இணக்கம் ஏற்படவில்லை என்பதையே குறிப்பிட்டதாக அரசியல் விமர்சகர்கள் இங்கு கருத்து வெளியிட்டனர். அமெரிக்கா ஜெனீவாவையும், வடவியட்னும், கம்போடிய தலைநகரான நம்பென்னையும் தத்தமக்கு விருப்பமான இடங்கள் என்று தெரிவித்திருந்தன.

## ஆசியத் தலைநகர் ஒன்றையே ஹனேய் விரும்புகிறது

வடவியட்னும், பூர்வாங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஓர் ஆசியத் தலைநகரில் வைத்துக்கொள்வதையே விரும்புவதாக ஹனேய் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [illegible] தலைநகரான ரங்கூன் அல்லது லாவோஸ் தலைநகரான வியன்ஷியென் உகந்த இடமாகத் தமக்கு இருக்குமென ஹனேய் விரும்புவதாகவும் கூறப்படுகிறது.

ஆசியத் தலைநகர் ஒன்று தான் வடவியட்னுமுக்கு விருப்பமெனில், அது புதுடில்லியாகவோ அல்லது ஜக்கார்த்தாவாகவோ அமைய வேண்டுமென [illegible] கருத்துத் தெரிவித்துள்ளதா [illegible]

---

மா எதிர்ப்புதாக்குதல் முறியடிக்கப்பட்டது

பீகிங், ஏப்ரல், 10

காண்டன் மாகாணத்தின் ஹனான் தீவு மீதான மாசேதுங் எதிரப்பாளரின் தாக்குதல் ஒன்றை மா ஆதரவாளர் முறியடித்துள்ளதாகக் காண்டன் ரேடியோ அறிவித்துள்ளது.

---

## சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும்

### யூ தாண்ட் நம்பிக்கை

ஹேக், ஏப்ரல் 10

வியட்னுமில் சமாதானத்தை நிலைநாட்டுமுகமாக விரைவில் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கும் வடவியட்னும் பிரதிநிதிகளுக்கு மிடையே பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடக்குமென்பதில் தமக்கு அதிக நம்பிக்கை இருப்பதாக ஐ நா. பொதுக் காரியதரிசி யூ தாண்ட், தமது மூன்றுநாள் நெதர்லாண்ட்ஸ்விஜயத்தை முடித்துக்கொண்டு நியூயோர்க் திரும்பமுன்னர் இங்கு தெரிவித்தார்.



வியட்னுமில் சமாதானம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள், கடந்த நான்கு வட்வருடங்களிலும் பார்க்க இப்போதுதான் அதிக அளவில் அநுகூலமாக அமைந்துள்ளதாகவும் யூ தாண்ட் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 கலைக்கழகங்களுக்கு நிதி உதவி கிடைக்கும்

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்க நன்கொடைப் பணம் பெறுவதற்கு யாழ். பிரதேசக் கலாமன்றம் சிபாரிசு செய்த 8 யாழ்ப்பாணக் கலைக் கழகங்களில் 6 கலைக் கழகங்களுக்கு கல்விக் கலாச்சார அமைச்சு நிதிஉதவி அளிக்க சம்மதித்துள்ளதாகத்தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் சிறந்த முறையில் கலைக்குத்தொண்டாற்றிவரும் கலைக்கழகங்களுக்கு கல்வி கலாச்சார அமைச்சு நன்கொடைப் பணம் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதைத் தொடர்ந்தே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இக்கலைக்கழகங்களுக்கு அரசாங்கம் நன்கொடைப்பணம் வழங்க முன்வந்ததாகத் தெரிகிறது.

## சிரமதானம் பற்றி ஆராயப்பட்டது

யாழ்ப்பாணம், வியா.

யாழ் மாவட்டத்தால்இவ் வருடத்தில் மேற்கொள்ளப் படவிருக்கும் சிரமதான வேலைகள் பற்றி ஆராயும் பொருட்டு இதன் செயற் குழுக்கூட்டம் இம்மாதம் 7-ம் திகதி யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா இக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். யாழ்ப்பாணம் சிரேஷ்ட கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் கடந்த வருட அறிக்கையை இங்கு சமர்ப்பித்தார்.

(கா. நி.)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியா. 11-4-68**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-15, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அன் 49 மீற்றர்

பகல்12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் அன் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடி விளையாடு பாப்பா.

இரவு 6-15 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-30 கதம்ப இசை, 6-45 பாவளம் 7-00 கிராமசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு 9-45 உரைசித்திரம், 10-00 தேர்ந்த இசை.

## நல்ல நிலைமையில் இயங்குகிறது

நெடுங்கேணி, புதன்

நெடுங்கேணியில் பதினெட்டுக் கிராமங்கள் மத்தியில் கடந்தவருடம் அமைக்கப்பட்ட கலைவாணி மாதர் நெசவாளர் சங்கம் நல்ல நிலையில் இயங்கிவருகிறதாகத் தெரிவிக்கப்பட்டது. பயிற்சிபெற்ற பல மாணவிகள் ஒன்றுகூடி ஸ்தாபித்த இச்சங்கம் நெடுங்கேணி காரியாதிகாரி திரு. ஜே. செந்தில்நாதனின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது.

## திருச்சடங்குகள்

ஊர்காவற்றுறை, புதன்

பெரியவியாழன், பெரிய வெள்ளி, சனி, உயிர்த்த ஞாயிறு திருச்சடங்குகள் ஊர்காவற்றுறை, கரம்பன், நாரந்தனை ஆகிய மிசாம்களில் நடைபெறும். இன்று வியாழக்கிழமை இரவு பேசுநாதர் தமது சீடர்களுக்கு, கால்கள் கழுவிய ஞாபகார்த்தமாக 12 பேருக்கு பங்குக்குரவரால்கால்கள் கழுவி சுத்திசெய்யப்படும்.

## தாயகம் சென்றவர்கள்

கொழும்பு, புதன்

சென்ற மாதத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையில் வாழ்ந்து வந்த 1185 பேருக்கு இந்திய பிரஜா உரிமை வழங்கப்பட்டது 1964-ம் வருடம் அக்டோபர் 30-ம் திகதி இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் இதுவரை 20,392 பேருக்கு இந்திய பிரஜா உரிமை வழங்கப் பட்டுள்ளது. இதில் 4763 பேர் தாமாகவேவிரும்பி இந்தியா சென்றுள்ளார்கள்.

## யாருடைய கூப்பன்கள்?


கரம்பனைச் சேர்ந்த திரு. கே. நல்லையா என்பவரால் பரந்தன் சந்தியில் இரண்டு கூப்பன்கள் கண்டெடுக்கப் பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## சங்காபிஷேகம்

ஆவரங்கால், புதன்

ஆவரங்கால் நெல்லியோடை முத்துமாரியம்மன் கோவில் சங்காபிஷேக விழா இன்று காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை நடைபெறும். அன்று காலை தொடக்கம் மாலை வரை அம்பாளுக்கு விசேஷ பூசையும் அர்ச்சனைகளும் நடைபெறும். மாலை 5 மணிக்கு அம்பாள் சப்பறத்தில் வீதி வலம் வருவார்

## "பேதமின்றி உழைப்போம்"



"வளர்ந்து வரும் சனப் பெருக்கம் எமது நாட்டை மிகவும் கஷ்டப்பாதையில் கொண்டு செல்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்த நாட்டின் உணவுப் பற்றுக் குறையை நீக்கி தொழில் வளத்தை முன்னேற்ற வேண்டுமாயின் விவசாயத்தைப் பெருக்க அனைவரும் எதிர் வரும் புத்தாண்டில் மொழி, இன, மத பேதமின்றி ஒன்று பட்டுச் செயலாற்ற வேண்டும். எமது தேசிய அரசு இன்று போல் தொடர்ந்தும் விவசாயத்துறையில் மொழி, இன, மதபேதமின்றி செயல் முறையில் வழிகாட்டும்என எதிர் பார்ப்போம். எமது வறுமையையும் பசியையும் போக்கப் பாடுபடும் விவசாயப் பெருமக்களுக்கு சகல வளங்களும் பகிப் பெருக இப்புத்தாண்டு பொலிவுறுமாக. இப் புத்தாண்டில் "ஊறு பசியும், ஓவாப்பிணியும் செறுபகையும், சேராதிருக்க" எல்லாம் வல்ல இறைவன் அருள் கூட்டுவாராக"

என உடுவில் கிராம சபைத் தலைவர் திரு. ச. முத்துலிங்கம் சிங்கள வருடப்பிறப்பை யொட்டி வெளியிட்டுள்ள செய்தியொன்றில் தெரிவித்துள்ளார்.

## உள்நாட்டு அமைச்சரின் உறுதி

காலி, புதன்

பிரிவெனாக்களுக்கு தேசிய அரசாங்கம் எவ்வித கொடுமையும் செய்ய முயற்சிக்காது எனத் தாம் உறுதி கூறுவதாக உள் நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ தஹநாயக்கா காலிவெலிவத்தையிலுள்ள விஜயாநந்தராம ஆலயத்தில் நடைபெற்ற பிரிவெனாக்களின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

நமது நாட்டின் கல்வித் துறையில் பிரிவெனாக்கள் முக்கிய பங்குகொண்டுள்ளதாகவும் இதனைப் பாதிக்கும் வகையில் யார் நடத்துகொண்டாலும் அதை இயன்ற வரை தடுக்கத்தகுந்த முயற்சி மேற்கொள்வதாக உறுதி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

## இசை விழா

யாழ்ப்பாணம், வியா.

திருநெல்வேலி இந்து மன்றத்தின் வருடாந்த இசை விழா இம்மாதம் 14-ம் திகதி முதல் 16-ம் திகதிவரை திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

முதலாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு யாழ். மாவட்ட சமூக சேவை இலாகா உதவி அதிபரான திரு. ந. சிவசிதம்பரமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு நல்லூர் கிராமசபைத் தலைவர் திரு. பொ. குமாரகுலசிங்கமும், இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்கு இளைப்பாறிய மாவட்ட நீதிபதி [illegible] தலைமை தாங்குவார் [illegible]

# இனவேற்றுமை நீக்க பிரிட்டன் நடவடிக்கை

லண்டன், ஏப்ரல் 10

பிரிட்டன் தனது நாட்டில் இன வேற்றுமையை நீக்குவதற்கான புதிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

இதுசம்பந்தமாகப் புதிய இனத் தொடர்புகள் மசோதாவொன்று இங்கு வெளியிடப்பட்டுள்ளது. இம் மசோதா இன்னும் சில வாரங்களில் பார்லிமெண்டில் விவாதிக்கப்படவிருக்கிறது.

வீட்டு வசதிகள் வேலை வாய்ப்பு இவை போன்ற முக்கிய துறைகளில் இன ஒதுக்கலை நீக்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பார்லிமெண்டுக்கு இம்மசோதா அதிகாரமளிக்கிறது.

## மற்றுமொரு புதிய [illegible]ண்கலம்

### ரஷ்யா அனுப்பியுள்ளது

மாஸ்கோ, ஏப்ரல். 10

ரஷ்யா 'கொஸ்மோஸ் 211' என அழைக்கப்படும் மற்றுமொரு புதியவிண்வெளிக்கலத்தைச் சந்திரமண்டலம் நோக்கி அனுப்பியுள்ளது.

விண்கலத்திலுள்ள உபகரணங்கள் யாவும் முறையாக இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலையகம் விழாக்கோலம்

நாவலப்பிட்டி, புதன்

மலை நாட்டின் பல பகுதிகளிலும் கடும்மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. குடிநீர் அற்றிருந்த சில பகுதி மக்கள் தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பெரிதும் களிப்புற்றுள்ளார்கள்.

மலையகத்தின் பல பகுதிகளிலும் காமன் விழா மாரியம்மன் திருவிழா கந்தன் திருவிழா ஆகியனதொடர்து நடைபெற்றுவருகிறன்ன. இதனால் மலையக நகரங்கள் தோட்டங்கள் விழாக் கோலம்பூண்டு காட்சிதருகின்றன.

## அரபுநாடுகள் ஒன்று சேருகின்றன

### நாஸர் அறிவிப்பு

கெய்ரோ, ஏப்பிரல். 10

இஸ்ரேலை வெற்றி கொள்வதற்காக அரபு நாடுகள் அரசியல் இராணுவரீதியாக மீண்டும் ஒன்று சேர்வதாக ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸர் இங்கு அறிவித்துள்ளார்.

இஸ்ரேலுடனான நேரடியாகபேச்சு வார்த்தைகளை நாஸர் நிராகரித்தார்.

# நகர மக்கள் வாரம் கட்டுரை, கவிதை போட்டி

### 'ஈழநாடு' அளிக்கும் வாய்ப்பு

யாழ்ப்பாண நகரில் வாழும் மக்களுக்கு, தங்கள் நகரின் சிறப்பிலும் அதன் முன்னேற்றத்திலும் ஆர்வமும், அக்கறையும் ஏற்படுத்தும் நோக்கத்துடன் அடுத்த மாத முற்பகுதியில் 'நகர மக்கள் வாரம்' கொண்டாடப்பெறவிருக்கிறது. இவ் வாரத்தையொட்டி 'ஈழநாடு' கட்டுரை, கவிதைப் போட்டியொன்றை ஒழுங்குசெய்துள்ளது.

### 'அழகு வாய்ந்த யாழ். நகர்'

இதுதான் கட்டுரை, கவிதைப் போட்டியின் தலைப்பு. இப்போட்டி மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளது. 14 வயதுக்குட்பட்டவர்கள் 300 முதல் 500 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரை எழுதவேண்டும். 19 வயதுக்குட்பட்டவர் 500 முதல் 750 சொற்கள்வரை அடங்கியதாக கட்டுரையை அமைத்துக்கொள்ளவேண்டும்.

வயதுக் கட்டுப்பாடு எதுவும் இல்லாத பொதுப் போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் கட்டுரையை 750 சொற்களிலிருந்து 1000 சொற்களுக்குள் அடக்கிக்கொள்ளவேண்டும்.

கவிதைப் போட்டியில் கலந்துகொள்பவர்களும் இயன்றவரை சிறிய கவிதைகளையே இயற்றுவது விரும்பத்தக்கது.

இப்போட்டி சம்பந்தமான இதர விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

கட்டுரை, கவிதைகளை 'நகர மக்கள் வாரப் போட்டி,' ஆசிரியர், ஈழநாடு, த. பெ. எண்:49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.


"யாழ்ப்பாணக் கிளை"

டபிள்யூ. எஸ். பெருணண்டோ அன் சன், (நீர்கொழும்பு)

திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள், மலர் வளையங்கள் எம்மிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும். பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.

சலார் சகாயம்.

84, பாங்ஷால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம்.



"சூரியன் மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

இடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி:

ஊரெழுவில் பிள்ளையார் கோவிலுக்கு பிற்பக்கம் 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரங்கள் போயா தினங்களில் அறியலாம். ஆ. இரத்தினசபாபதி 65/1 அரசடி வீதி, குசவன் குளம், யாழ்ப்பாணம். 1417

மோட்டார் சைக்கிள்:

நல்ல நிலையிலுள்ள 4 சிறி தொடர்பிலக்க 3.5 B.S.A. மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கே. நடராசா, சுங்க தடை அதிகாரி, Customs, காங்கேசன்துறை. டெலிபோன்: 805 1420

ஒரு ஹோட்டலுக்குரிய சகல தளபாடங்கள், சோக்கேஸ்கள், மேசைகள், இட்லிப்பானை, ஆட்டுக்கல் முதலியன விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். கமலா புத்தகசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1413

7 வார வயதுடைய உயர் ஜாதி அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆண்குட்டி ரூபா 125/-. பெண் குட்டி ரூபா 100/- விபரங்களுக்கு திருமதி ச. இராசதுரை, முதலாவது ஒழுங்கை, வில்சன் ரோட், கிளிநொச்சி. 1416

## காணவில்லை

லோயிட் அலெக்சான்டர் கார் இடது பக்க ரைவிங் சாவ்ட் [DRIVING SHAFT] நாவலர் சந்திக்கும் பெரியகடைக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சமுத்திரா திரேடர்ஸ். 23/2, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். போன்: 7236 1424

## தேவை

காணி:

வவனியா அல்லது அதைச் சூழ உள்ள இடங்களிலிருந்து பத்திலிருந்து இருபத்தைந்து ஏக்கர் வரை விஸ்தீரணமுள்ள தண்ணீர் வசதியுடன் கூடிய உணவுச் செய்கைக்கான காணி தேவை. தொடர்புகொள்க. செ. சிவசாமி, 79 1/1, அல்விஸ் பிளேஸ், கொட்டாஞ்சேனை. கொழும்பு-13. 1423

## பிரபல சோதிடம்

| | |
|---|---|
| ரேகை பலன் ரூபா | 2/- |
| சாதக பலன் ரூபா | 3/- |
| ஆருட பலன் ரூபா | 1/- |

S. சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1419

## கு

சகலவசதிகள் நிறைந்த வீடு ஒன்று பிறவுன் வீதியில் உள்ளது. நல்ல குடும்பஸ்தர் விரும்பத்தக்கது. விபரங்கட்கு: Mrs. M. I. செல்லையா, 46, பிறவுன்வீதி, யாழ்ப்பாணம். 1425


109-வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 3-30, 6-30, 9-30 போயாதினங்களில் 4 காட்சி

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த

காவல்காரன்



MANOHARA

JAFFNA

Daily at

4-45, 7-00 & 9-45 p. m.

Robert Stack, Nancy Kwan, Elke Sommer

in

THECORRUPTONES


# புதுவருட விளையாட்டு விழாக்கள்

## அளவெட்டியில்

அளவெட்டி, புதன்

காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியினர் புதுவருடப் பிறப்பன்று வலிவடக்கு விளையாட்டுக் கழகச் சமாசத்தின் [காங்கேசன் துறைப்பகுதி] சார்பில் விளையாட்டு விழாவை நடாத்த ஒழுங்கு செய்து வருகின்றனர்.

காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் இம்மாதம் 13ம்திகதி நடைபெறவிருக்கும் இவ் விழாவில் ஆண்களுக்கான 15 மைல் சைக்கிள ஓட்டப் போட்டி, பெண்களுக்கான ஒரு மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி 5மைல் மரதன் ஓட்டப் போட்டி' நீச்சல் போட்டி முதலியன நடைபெறும்,

இப் போட்டிகளுக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 10ம் திகதிக்கு முன்பாக புது வருட விளையாட்டுப் போட்டி அமைப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனகோரப்பட்டுள்ளது.

## உடுப்பிட்டியில்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித் தொகுதி வாலிப முன்னணியினர் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இரு தினங்கள் விளையாட்டுவிழா, விளையாட்டுவிழாக்களை நடாத்த முடிவு செய்துள்ளனர். இவ் விழாவுக்கான ஒழுங்குகளை உபசபாநாயகரும், உடுப்பிட்டி எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரமும், உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு, வீ. கே. ஆறுமுகமும் தீவிரமாகமேற்கொண்டுள்ளனர்.

இவ்விழாவில் நிதி அமைச்சர் திரு. யு. பி. வன்னிநாயக்கா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார் என அறியப்படுகிறது.

எதிர் வரும் 13-ந் திகதி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம். கரபந்தாட்டப் போட்டி முதலியன இடம் பெறும்.

14-ம் திகதி கரவை வெல்லன் வெளியில் நடைபெறும் போட்டிகளில் (காலை) 25 மைல் சைக்கிளோட்டம். [மாலை] மாட்டு வண்டி சவாரி, குதிரைச் சவாரிப் போட்டிகள் இடம் பெறவிருக்கின்றன. அன்றிரவு நடைபெறும் பரிசளிப்பு விழாவில் நிதிஅமைச்சர்திரு. வன்னிநாயக்கா பரிசில்கள் வழங்கி உரை நிகழ்த்துவார்.

## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

புனிதவளன் விளையாட்டுக் கழகத்தின் 20-வது வருடாந்த விளையாட்டு விழாவை ஒட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டி மேற்படி கழக மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றியீட்டிய வீரர்களின் விபரங்கள் பின்வருமாறு:

சி. பிரிவு 75 யார் ஓட்டம்: நி. தயாளன், பி. மைக்கேல், சே. சூசைதாசன். பி. பிரிவு 100 யார் ஓட்டம்: கி. டிக்சன், ப. பிராகரன், எஸ். சாலிஸ். ஏ. பிரிவு 100 யார் ஓட்டம்: பி. பேட்றன். நீ. ஜெக்குமார், ஜெ. தேவதாஸ். சி. பிரிவு 200 யார் ஓட்டம்: நீ. தயாளன், பி. மைக்கேல், சே. சூசைதாசன். பி. பிரிவு 200 ஓட்டம்: மா. வசந்தர், கி. டிக்சன், ப. பிராகரன். ஏ. பிரிவு 200 யார் ஓட்டம்: பி. பேட்றன், நீ. ஜெக்குமார், யே. தேவதாஸ். வடை உண்ணல்: செ. ஜி. வா. வி. முத்துக்குமார், பி. ஜோவா. பி. பிரிவு 45 யார் ஓட்டம்: எஸ். சான்ஸ், கி. டிக்சன், செ. யேசுதாசன். ஏ பிரிவு 800 யார் ஓட்டம்: நீ. அன்ரன், பி. பேட்றன், ஜெ. தேவதாஸ். பி. பிரிவு நீளம் பாய்தல்: மா. வசந்தர், கி. டிக்சன், ப. பிராகரன். ஏ. பிரிவு நீளம் பாய்தல்: யே. தேவதாஸ், பி. பேட்றன், ஜெக்குமார்.

[வி. நி]

## புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு, புதன்

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிநடைபெற்றபோது 305 புள்ளிகளைப் பெற்றுப் பாரதி இல்லம் முதலாம் இடத்தைச் சுவீகரித்துக் கொண்டது. திருவள்ளுவர் இல்லம் 267 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் கம்பர் இல்லம் 265 புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

கல்லூரி அதிபர் திரு. கு. வி. செல்லத்துரை தலைமையில் நடந்த இப்போட்டியில் கரதுறைப் பற்றுக் காரியாதிகாரி திரு. பொ. கணேசநாதன் பரிசுகளை வழங்கினார்.

விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் சில பின்வருமாறு: —

மேற்பிரிவு.- செல்வன் க. சிவபாலன், செல்வி ந. இந்திராணி,

மத்தியபிரிவு:- செல்வன் வே. குமாரசாமி, செல்வி பொ. மகேஸ்வரி.

கீழ்ப்பிரிவு:- செல்வர்கள் யோ. யோகராசா, ந. அருந்தவராசா. செல்விகள் சி, பரஞ்சோதி சி, செல்வநாயகி. ஒரு மைல் ஓட்டம் செல்வன் க. குமாரசாமி.

# கேள்விவிளம்பரம்

## நீர்வேலி-கிராமசபை

நீர்வேலி அரசொல்லை பூதர்மடம் ஒழுங்கை அமைப்பதற்கு 20-4-68ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன் இச்சபையால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். இதற்கு கேள்விப் பத்திரக்கிரயம் ரூபா 10/-ம் கேள்விப்பத்திரப் பிணைப் பணம் ரூபா 50/-ம் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரக்கிரயம் ரூபா 10/- திருப்பிக்கொடுக்கப் படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் நீர்வேலி கிராமசபைக் கந்தோரில் 24-4-68 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

மனுப்பத்திரங்களை அங்கீகரிக்கவோ நிராகரிக்கவோ இச்சபைக்கு அதிகாரமுண்டு.

இ. அப்பாத்துரை,
தலைவர், கி. ச. நீர்வேலி.
கிராமச்சபைஅலுவலகம்,
நீர்வேலி 8-4-68. 615

அரசாங்க கேள்விகள்

நீர்ப்பாசனத் திணைக்களம் என் 908-வவுனியா உபபிரிவிலுள்ள பூவரசங்குளத் திற்குத் திருத்தவேலைகள். இதன் முழு விபரங்களுக்கும் 11/4/68 இல் வெளிவந்த அரசாங்க வர்த்தமானி 1ம் பகுதி, 11ம் தொகுதியைப் பார்க்கவும். G.P. 2457

## ஏலவிற்பனை

கச்சேரி யாழ்ப்பாணம்

என் 911- யாழ்ப்பாணம் அரசாங்க செயலக எல்லைக்குள் நிற்கும் ஒரு மலைவேம்பு 24/4/68 காலை 10-30 மணிக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். முழு விபரங்களுக்கும் 11-4-68ந் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும். G P 2468

## குருநகர் பாடுமீன் சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அமெச்சூர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினர் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டிகள் யாவற்றிலும் வெற்றிபெற்று குருநகர்பாடும்மீன் சாம்பியனாகியது


மானிப்பாய் மருதடிவிநாயகர் கோவில் திருவிழா

இக்கோவில் உற்சவத்திலே 16ம்திருவிழா இம்மாதம்12ந்திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30மணிக்கு. அருட்கவி சீ. விநாசித்தம்பி அவர்கள் "விறகுவிற்ற விமலன்" எனும் திருவிளையாடல் சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்கள்.

எல்லோரும் வந்து கேட்டு, ஸ்ரீ விநாயகப்பெருமானை தரிசனம் செய்து அவரது பேரருளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம். 610 உபயகாரர்.



இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்

சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)



REGAL JAFFNA

Daily at

4-40, 7-00, & 9-45 p.m

in

Passport to Shame

[Adults only



புதுவருட பரிசு!

வெற்றிகரமான 2வது வாரம்!

ராணி சினிமா [யாழ்ப்பாணம்]

எம். ஜி. ஆர். கே. ஆர். விஜயா
விஜயகுமாரி அசோகன்
எம். என். நம்பியார்
நாகேஷ், மனோரமா

நடித்த

விவசாயி


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஸ்ரீராமபட்டாபிஷேக விழா

## நாளை நடைபெறுகிறது

யாழ்ப்பாணம், வியா.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராசப் பெருமான் கோவிலில் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்திக்கு இன்று வியாழக் கிழமை மாலை பட்டாபிஷேகத் திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து இரவு 10 மணி வரை நாதஸ்வரம், கவியரங்கு, உரையரங்கு பஜனை, ஓதுவாமூர்த்தியின் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளுடன் பட்டாபிஷேக விழாவும் நடைபெற விருக்கிறது.

உலகத்தமிழாராய்ச்சிமகாநாட்டில் பதக்கமும் பாராட்டும் பெற்ற ஈழத்துக் கவிஞர்கள் திரு. இ. அம்பிகைபாகன் திரு. இ. நாகராஜன் ஆகியோருடன் ஈழத்தின் பிரபல கவிஞர்கள் திரு. வி. கந்தவனம், காரை செ. சுந்தரம்பிள்ளை அரியாலையூர்வேஐயாத்துரை ஆகியோர் கவிஞர் மாகவி தலைமையில் கவியரங்கில் கலந்து கொண்டு வைகுண்டம் கண்டோம் என்ற தலைப்பில் கவி பாடுகிறார்கள்.

இணுவையூர்ஸ்ரீ தியாகேச திவ்விய இயக்கஸ்ரீ தியாகராச சா சுவாமிகளும் சகோதரர்களும் பிற்பகல் நிகழ்ச்சியை பஜனையுடன ஆரம்பித்து வைக்க அடுத்து வித்துவான் க. கி. நடராஜன் தலைமையில் காவியத்தில் பக்தி என்பதுபற்றி திரு. சொக்கனும் காவியத்தில் பெண் என்பது பற்றி திருமதி வள்ளிநாயகி இராமலிங்கமும் (குறமகள்) காவியத்தில் வாழ்கை நெறி பற்றி திரு. ஆ. கல்யாணசுந்தரேசனுரா உரை அரங்கில் கலந்து கொண்டு உரையாற்றவிருக்கின்றனர். இதன் பின்னர் காஞ்சிபுரம் மெய்கண்டராதீன வித்துவான்பண்ணிசைவேந்தர் திருபி. ஏ. எஸ் இராஜசேகரன்பிற்பகல்4-30 க்கும்பண்ணிசை விருந்தளிப்பார்.

அடுத்து மாலை நிகழ்ச்சிகள் நாதஸ்வர கலாநிதி திரு. என். கே. பத்மநாதன் கோஷ்டியினரின் நாதஸ்வர இசையுடன் மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். பின்னர் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநா தத்தம்பிரான் ஆசியுரை வழங்கியதும் வித்துவான் பொன்முத்துக்குமாரன் 'கம்பசித்திரம்' என்பது பற்றியும் பண்டிதர் க. சச்சிதானந்தன் 'இலட்சியத் தலைவன் இராமன்' என்பது பற்றியும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாகுட்டி 'பெரிது உத்தமன் பரதன்' என்பது பற்றியும் சொற்பொழிவாற்றுவர்.

பெருமாள் கோவில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அலங்காரப் பந்தலில் நடைபெறும் இவ்விழாவின் இறுதி நிகழ்ச்சியாக கலைமணி வடிவேலு கோஷ்டியினரின் வில்லுப்பாட்டும் இடம் பெறவிருக்கிறது.

## வாக்குரிமை......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறினர்.

திரு. டொமிக் டி சூசா பேசுகையில்: "கடந்த பொதுத்தேர்தலின் இறுதி நேரத்தில் தொண்டமான் தோட்டத் தொழிலாளர்களிடம் அவர்களுடைய வாக்குகளை கூட்டுக் கட்சிகளுக்குப்போட்டால் இந்தியா செல்ல நேரிடும். ஆகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டினர். வாக்குரிமை உள்ளவர்களை இந்தியாவுக்கு அனுப்ப எந்த அரசாங்கத்தாலும் முடியாது என்பதை அத் தோட்டத் தொழிலாளர்களிடம் உணர்த்த காலம்இல்லாமற் போயிற்று. அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் மாவட்டசபை மசோதாவிற்கு அரசாங்கக் கட்சிக்குள்ளேயேஎதிர்ப்புண்டு. பொதுத்தேர்தல் வைக்காமல் சர்வாதிகார முறையில் செல்ல முயன்ருல் அதனை எதிர்க்க மக்கள் தயாராக இருக்கவேண்டும்" என்ருர்.

## தங்கவிலை...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

தங்கத்தின் மூலமே தீர்த்துக்கொள்ளும் ஏற்பாடு உள்ளது. அதை விட்டு லாபம் சம்பாதிக்க தங்கத்தை யாம் வாங்குவதாயின், தங்கத்துக்கு அவர்கள் அதிக விலைகொடுக்க வேண்டியதே

இந்த "இரட்டை விலை' ஏற்பாட்டைச் செய்ததும் தங்க 'சூதாட்டம்' வெகுவாகக் குறைந்தது. இது மேலும் குறையக்கூடும். ஏனெனில் அந்தப்பணத்தை வேறு லாபகரமாக முடக்கலாம். சர்வதேச பண ர்க்கெட்டில் பணத்தை அதிக லாபகரமாக முடக்க எவ்வளவோ இடமுண்டு.

சில அரசாங்கங்கள் 35 டாலர் வீதம் தங்கத்தை அமெரிக்காவிடமிருந்து வாங்கி, வெளி மார்க்கெட்டில் 37 அல்லது 40 டாலர் வீதம் விற்ருல் என்ன செய்வதென்ற கேள்வி எழலாம். ஆனல் சர்வதேச தங்கக் கூட்டு நாடுகள் கவனமாக இருப்பின் இவ்விதம் ஏற்பட முடியாது. வெளியேயும் தங்க விலை இப்போது படிப்படியாகக்குறைவதால் அந்த ஆபத்து இராது என்றே சொல்லலாம்.

'இன்பா'

## சிறுபான்மை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திகளை உயர்த்துவது பிழையானது. பின்தங்கிய பகுதியில் உள்ள பிள்ளைகளுக்கு கல்வி புகட்டுவது அவசியம்தான். அதற்காக உயர்நிலை பாடசாலைகளை குட்டிச்சுவராக்குவதா? அங்குள்ள பட்டதாரிகளை இடமாற்றம் செய்வது சரியா? புதிய ஆசிரியர்களை நியமித்தால் என்ன?

### ஆசிரியர்நியமனம்

1960-ம் ஆண்டுக்குப் பின்னர், எத்தனை தமிழ் ஆசிரியர்களை அரசாங்கம் நியமித்திருக்கிறது. எத்தனை தமிழ் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கியிருக்கிறது. படித்துவிட்டு வேலையற்றிருக்கும் ஆயிரக்கணக்கான வாலிபர்களுக்கு நியமனம் கொடுக்க முடியாதா?

நைஜீரியா, கானு போன்ற தூரதேசங்களுக்குச் சென்று உத்தியோகம் பார்க்க முன்வரும், நமது வாலிபர்களுக்கு அரசாங்கம் உள்ளூரிலேயே வேலைகொடுக்க முடியாதா? 50 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை கஷ்டமான இடங்களுக்கு அனுப்பினுல் எப்படிப் போவார்கள். வாலிபர்களுக்கு நியமனம் வழங்கினுல் அவர்கள் எந்த கஷ்டமான இடத்திற்கும் சென்று நிரந்தரமாகவே இருப்பார்கள்.

திருவாளர்கள் ஏ. கே. மணிக்கம், எஸ். நல்லதம்பி, பி. குமாரசாமி, வி. பஞ்சாட்சரம், அடைக்கலமுத்து, வி. கந்தையா உட்பட மற்றும் பலர் பாராட்டிப்பேசினர்.

# 'பெரும் பகுதியினரை உள்ளே விட மறுப்பது பெரிய அநீதி'

## செல்வச்சந்நிதி ஆலயப் பிரவேச ஆலோசனைகூட்டத்தில் பொலிஸ் அதிபர்

### அவகாசம் கோரியுள்ளனர் கோயில் உரிமையாளர்கள்

வல்வெட்டித்துறை, புதன்

தொண்டமானுறு செல்வச் சந்நிதி கோவில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமான இறுதிமுடிவைத்தெரிவிக்க கோவில் உரிமையாளர்கள் செப்டம்பர் மாதம் முதலாம் திகதிவரை அவகாசம் கோரியுள்ளனர்.

தொண்டமானுறு செல்வச் சந்நிதி கோவில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று காலை 11 மணிக்கு கோவிலுக்கு அருகாமையில் இருக்கும் தொண்டமானுறுகிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில் நடைபெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமை தாங்கினர்.

திரு. சுந்தரலிங்கம் தலைமை வகித்துப்பேசுகையில் கூறியதாவது:-

'ஆலயம்பிரவேசம் சம்பந்தமாக பலதரப்பட்ட மகாநாடுகள் கூட்டி ஆலோசனை நடத்தியுள்ளோம். பொதுவாக மக்களிடையே மனமாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

செல்வச் சந்நிதிகோவில் வழக்கில் சாதி அடிப்படையில் ஒருவரை கோவிலுக்குள் செல்லாதவாறு தடுத்தல் ஆகாது என்பதையும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வழிபாட்டிடங்களுக்கு அனுமதிக்கப்படவேண்டும்என்று வழங்கப்பட்ட தீர்ப்பை எல்லோரும் உணரவேண்டும். இது அரசாங்கத்தின் கொள்கையாதலால் சாதி வேறுபாடு பாராட்டாமல் எல்லோருக்கும் கோவில்கள் திறந்துவிடப்படவேண்டும். இவ்வித ஆலயப்பிரவேசம் நடக்கும்போது அசம்பாவிதமான சம்பவங்கள் ஏதுவும் நடவாதபடி பொலிசார் பாதுகாப்புக் கொடுப்பார்கள் என்பதையும் எடுத்துக் கூறவிரும்புகிறேன். இந்துக்களில் ஒரு பெரும் பகுதியினரை ஆலயத்துக்குள் விடாமல் தடுப்பது ஒரு பெரிய சமூக அநீதியாகும். சாதி முறையில் ஓர் இந்து தான் மற்றவர்களைவிடப் பெரியவன் என்று கூறிக்கொள்வது அகம்பாவமாகும்.

காங்கேசன்துறைப் பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி பேசுகையில், சுமுகமான முறையில் ஆலயப்பிரவேசத்தை நடத்திவைக்க விரும்பிய காரணத்தாலேதான் இந்த ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினேம் என்ருர்.

திரு. க. ஆறுமுகசாமி ஐயர் பேசுகையில், இக்கோவில் எங்களுக்குச் சொந்தம். இக்கோவிலை சீதனம் கொடுக்கவும் முடியும். கடனுக்கு கோவிலும் காணியும் கோட்டார்மூலம் விற்பனை செய்யப்பட்டும் இருக்கிறது. இது எங்கள் உரிமையான கோவில். உரிமை வழக்கு நடத்தி கோட்டு மூலம் உத்தரவு எடுத்து வந்தால் பொலிசார் உதவிசெய்யலாம். ஆலயத்திற்குள் உட்பிரவேசித்து உரிமை பெறவிரும்பினுல் நாளைக்கு வந்து உரிமைபேசுவதற்கு வழக்கு நடத்தட்டும். அதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம் என்ருர்.

செ, விசாகரத்தினம்ஐயர் பேசுகையில் இவ் வழக்கு சம்பந்தமாக பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்ய முயற்சிசெய்து வருகிறோம். பிரிவுகவுன்சிலில் இவ் வழக்கை விசாரணை செய்வதற்கு பிரிவுக் கவுன்சில் ஏற்றுக்கொள்ளுமா கொள்ளாதா என்ற முடிவு செப்டம்பர் முதலாம் திகதிக்கு முன்பு தெரிந்துவிடும். இவ் வழக்கை விசாரணை செய்ய ஏற்றுக் கொள்ளவில்லையென்று தெரிந்த அடுத்த தினமே இக்கோவிலை உங்கள் விருப்பப்படி நடத்தலாம் என்ருர்.

## வெள்ள நிவாரணத்துக்கு ரூ. 60 லட்சம்

கொழும்பு, புதன்

வெள்ளநிவாரண வேலைகளுக்கென ரூ 60 லட்சம் ஒதுக்குவதற்கானஒருபிரேரணை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில்நிறைவேறியது

1967-68-ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் போது ஏற்பட்ட சேதங்களுக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணம் போதவில்லை யென்றும் அதனுல் அவசரகால நிதியிலிருந்தும் பணம் எடுக்கப்பட்டதென்றும் சமூக சேவைகள் அமைச்சர்திரு அசோக கருணரத்ன சபையில் கூறினர், எதிர்கட்சியின் ஆதரவுடன் பிரரணை நிறைவேறியது.

## இன்று தீர்த்தத் திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் 19-ம் திருவிழாவான தீர்த்தத் திருவிழா வாகிய இன்று காலை 5-15 மணிக்கு நடேசரபிசேகமும் பின் காலை 7 மணிக்கு நடேசர் உற்சவமும், பகல் 10 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் தீர்த்தோற்சவமும் பின் நண்பகல 12-30 மணிக்கு மகாயாக கும்பாபிஷேகமும் மாலை 7 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் பின்னர் கொடியேற்றமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணம், வியாழன்

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார்கோயிலில்இன்று 1008 சங்குகளால் அபிஷேகம் நடைபெறும். காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படும்.

## 'பக்த நந்தனர்'

யாழ்ப்பாணம், வியா.

ஏழாலை மேற்கு தம்புவத்தை ஞானவைரவர்கோவிலில் 5.ம் திருவிழா நாளை இரவு நடைபெறும். இத் திருவிழாவின்போது ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் பக்த நந்தனர் பற்றி கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.

## நியூசிலாந்தில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தமர் திரு. ஹோலியோக செய்துள்ளார். இவ்விதம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெலிங்டன் துறைமுகத்தில் நின்று கொண்டிருந்த சிறிய படகொன்று வீசிய சூருவளியால் மூழ்கியதால் இப்படகிலிருந்த 20 பேர் மூழ்கி மாண்டனர்.

வீதியில் சென்று கொண்டிருந்த ... ஸ்தலத்திலேயே மாண்டார்.

# துணிகாயப்போட்டார் மின்சாரம் தாக்கியது

## இளம்பெண் மரணம்

இமையாணன், புதன்

இளம்பெண் ஒருவர் மின்சாரத்தினுல் தாக்குண்டு ஸ்தலத்திலேயேதுடிதுடித்து மரணமான சம்பவம் ஒன்று இன்று வல்வெட்டியில் நடந்துள்ளது.

வல்வெட்டித்துறை புஸ்தகவிற்பனையாளரான கந்தசாமியின் இளைய மகளான விஜயலட்சுமி என்பவரே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவராவார். சுமார் 25 வயது மதிப்பிடத்தக்க இப்பெண் தமது வீட்டின் கிணற்றில் குளித்துவிட்டு பின்புறமிருந்த மதிலில் சென்றுகொண்டிருந்த மின்சாரக் கம்பிக்கு அருகில் கம்பியினுல் கட்டியிருந்த கொடி ஒன்றில் துணிகாயப் போட்டபோது மின்சாரக் கம்பியினூடாகப் பாய்ந்த மின்சாரம், அக்கொடிக்கம்பியில் பாய்ந்து அப்பெண்ணைத்தாக்கியதால் அப்பெண் தூக்கி எறியப்பட்டு மரணமானதாக விசாரணையின்போது தெரியவந்தது. இன்று நண்பகல் சுமார் இரண்டுமணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தின் சிறிதுநேரத்தின்பின் இதைக் கண்ட அயலவர்கள், வல்வெட்டித்துறை இந்திராணி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

## மரண அறிவித்தல்

இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் நிர்வாகிகளில் ஒருவரும் இளைப்பாறிய ஆசிரியரும் யோ. கி. மரியதாசன் பி.ரி. யேசுதாசன் [பி.எஸ்.சி.] திருமதி ஜே. ஜீவரத்தினம் முதலியவர்களின் தந்தையும் பிரசித்த நொத்தாரிஸ் கி. துரைசிங்கம் அவர்களின் மைத்துனருமான ஜே.எம். யோசே 10-4-68-ல் இயற்கையெய்தினர். அன்னரின் பூதவுடல் 11-4-68 வியாழக்கிழமை காலை 11 மணிக்குயாழ்ப்பாணம்சென் மேரி இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும். 1507

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு ... பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org